பக்கங்கள் 18+6

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 12 பேர் கைது!

(மஸ்கெலியா நிருபர்)

சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று காலை பொகவந்தலாவை 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 05 ஞாயிற்றுக்கிழமை 21.07.2024 அதிர்வு 356




# தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு

### யாழில் தந்தை செல்வா கலையரங்கில் ஆரம்பம்







(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு இன்று மாலை 3 மணியளவில் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் ஆரம்பமானது.

கூட்டணியின் செயலாளர் நாயகம் நாடாளு மன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த மாநாட்டில் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் பங்கேற்றுள்ளனர்.

மங்கள வாத்தியங்கள் முழங்க 03

# மருமகனின் தாக்குதலில் மரணமடைந்த மாமனார்

### சாய்ந்தமருது பகுதியில் கொடூரம்







(பாறுக் ஷிஹான்)

மருமகனின் தாக்குதலில் மரணமடைந்த மாமனாரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வொலிவேரியன் கிராமத்தில் பிரிவு 9 இல் இன்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபரான 32 வயதுடைய றிஸ்வி முகமட் அன்சார் என்ற நபர் தலைமறைவாகியுள்ளார்.

திருமணமான தனது மகளை விவாகரத்துச் செய்யத் தயாரான மருமகனுடன் ஏற்பட்ட முரண்பாடே கொலையில் முடிவடைந்துள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. 04



# தமிழ்ப் பொது வேட்பாளரின் தேவை தொடர்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் கருத்தமர்வு

**(கே.வசந்தன்)**

சமகால அரசியல் கருத்துப் பகிர்வும், தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக பொதுமக்களுக்குத் தெளிவூட்டும் நிகழ்வும் வவுனியாவில் இன்று நடைபெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா, வாடி வீட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் சமகால அரசியல் தொடர்பாகவும், தமிழர் தரப்பில் பொது வேட்பாளரின் முக்கியத்துவம் தொடர்பாகவும் உரையாற்றினர்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசியின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செட்டிகுளம்பிரதேசசபையின் முன்னாள் தலைவர் ஜெகதீஸ்வரன் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.














# தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, மாலைகள் அணிவிக்கப்பட்டு, கட்சிக் கொடி ஏற்றப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் மாநாட்டு நிகழ்வு ஆரம்பமாகியது.

இதன்போது மங்கள விளக்கின் முதல் சுடரைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து செயலாளர் நாயகம் விக்னேஸ்வரன் எம்.பி., தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, சிறப்புப் பேச்சாளரான யாழ். பல்கலைக்கழக அரசியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், யாழ். மாநகர முன்னாள் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மயூரன், பேராசிரியர் கந்தையா சர்வேஸ்வரன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்கள் ஏற்றிவைத்தனர்.

போரில் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கான பொது நினைவுச்சுடரை விக்னேஸ்வரன் எம்.பி. ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதன்பின்னர் அண்மையில் உயிரிழந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனங்கள், கலை நிகழ்வுகள், சிறப்புப் பேச்சுக்கள் இடம்பெற்று விருந்தினர் கௌரவிப்புக்களும் நடைபெறுகின்றன.























# மட்டக்களப்பில் 7 பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகி இருந்து வந்த மதபோதகர் கைது!

**(கனகராசா சரவணன்)**

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தால் 7 பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகி இருந்து வந்த மதபோதகர் ஒருவர் இன்று மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டு. தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் தேவாலயம் ஒன்றில் மத போதகராகச் செயற்பட்டு வரும் இவருக்கு எதிராக வெளிநாடு அனுப்புவதாகப் பண மோசடி தொடர்பாக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைக்குக் மேற்படி மதபோதகர் ஆஜராகாமல் தலைமறைவாகி வந்துள்ள நிலையில், அவருக்கு எதிராக நீதிமன்றம் 7 பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்பட்ட நிலையில், மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாருக்கு இன்று கிடைத்த தகவலுக்கமைய நண்பகல் 12 மணியளவில் அவரது தேவாலயத் துக்கு அருகில் வைத்து அவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நாளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# இந்தியா, சீன உதவிகளை மக்களுக்கு வழங்கி வைக்கும் அமைச்சர் டக்ளஸ்

**(ந.லோகதயாளன்)**

வடக்கு மீனவர்களுக்குச் சீனாவின் அரிசிப் பொதிகளை வழங்கி வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி – அக்கராயன் கரும்புத் தோட்ட அமைப்புக்கு இந்திய அரசால் அனபளிப்புச் செய்யப்பட்ட உழவு இயந்திரத்தை வழங்கி வைத்தார்.

சீன அரசின் அரிசி விநியோகம் இடம்பெறும் சமயம் கிளிநொச்சி – அக்கராயன் பகுதியில் அமைந்துள்ள கரும்புத் தோட்டச் செய்கையாளருக்கு ஒரு உழவு இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட உழவு இயந்திரமானது இந்திய அரசால் வடக்கு விவசாயிகளுக்கென வழங்கப்பட்டு கமநல சேவை நிலையங்களில் தரித்து நிற்கும் உழவு இயந்திரங்களில ஒன்று எனவும், அது அக்கராயன் கமநல சேவை நிலையத்தின் பதிவில் இருந்த 12 உழவு இயந்திரங்களில் ஒன்று எனவும் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மருமகனின்...**

அடிக்கடி இந்த விடயத்தால் தனது மாமாவுடன் தகராறு செய்து வந்த மருமகன் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதுடன் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் இரு வேறு குற்றச்சாட்டுக்களுக்கு விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குக் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் அம்பாறையில் இருந்து வரவழைக்கப்பட்ட தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தாக்குதலுக்குள்ளாகி மரணடைந்த 62 வயதுடைய மீராசாயிப் சின்னராசா என்பவரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

**சட்டவிரோதமாக...**

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது மேற்படி 12 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக பொகவந்தலாவை, ராணி காட்டுத் தோட்டப் பகுதியிலும், காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங்கும் பிரதான ஆறான கெசல்கமு ஓயா ஆரம்பிக்கும் மாஎலிய வனப் பகுதியிலும் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த 12 பேர் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி 12 பேரும் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்று பொகவந்தலாவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுகத் தெரிவித்தார்.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY
27
2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் அற்பத்தனம்

தமது அரசின் அர்த்தமற்ற - அபத்த - முயற்சியான 22 ஆவது அரசமைப்பு திருத்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தந்த விளக்கத்திற்கு அரசமைப்பு விவகார சட்ட நிபுணரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன தெளிவான விளக்கம் ஒன்றை வழங்கி இருக்கின்றார்.

தமது சுயநல அரசியலுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எத்தனை தூரம் அற்பத்தனமாக நடந்து கொள்வார் என்ற உண்மையை ஜயம்பதி விக்கிரமரத்னவும், இவ்விடயங்களை முன்னைய நல்லாட்சி அரசில் அவருடன் சேர்ந்து கையாண்ட மற்றொரு சட்ட நிபுணரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் அம்பலப் படுத்தி இருக்கின்றனர்.

வழமையாகத் தாம் தமது அரசமைப்பு விவகார விடயங்களை ஜனாதிபதி சட்டத்தரணி கே.என்.சொக்ஸி மூலமே கையாளுவார் என்றும் -

எனினும் 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட சமயம் அவர் இல்லாதமையால் அந்த விடயங்களை கையாளும் பொறுப்பு ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்னவிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் -

அப்போது அவர் கவனிக்காமல் விட்ட தவறு ஒன்றே இப்போது தமது அரசினால் 22 ஆவது திருத்தம் என்ற பெயரில் முன்னகர்த்தப்படுகின்றது என்றும் -

சாரப்பட தற்சமயம் பொதுஉரை ஒன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுக் கதை விட்டிருந்தார்.

அதற்கே ஜயம்பதி விக்கிரமரத்னவும் சுமந்திரனும் பதிலடி தந்து, உண்மைகளைத் தெளிவு படுத்தி இருக்கின்றனர்.

2015 ஜனவரியில் ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய எதிரணியின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன வென்று, மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட போது நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆக வெறுமனே 45 எம்பிக்கள் மட்டுமே இருந்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அப்போதைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைப்பற்றி, அக்கட்சியின் ஆதரவை ரணிலின் அந்த அரசுக்கு வழங்கச் செய்து, அதனைத் தாங்கிப் பிடித்தார். அந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்னதாக, அந்த நல்லாட்சி அரசினால் ஆக 45 எம்பிக்களை மட்டும் கொண்டு அமைக்கப்பட்ட பிரதமர் ரனில் விக்ரமசிங்கவின் அரசினால், ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் ஏற்பாடுகளைக் கொண்ட 19 ஆவது திருத்தம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முழு இணக்கத்துடனும் ஆதரவுடனும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாத வகையிலான திருத்தங்களை அரசமைப்பில் கொண்டு வருவது என அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் தீர்மானிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அந்தத் திருத்தம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பான அரசமைப்பின் 83 (ஆ) ஷரத்தில் கைவைப்பது சர்வஜன வாக்கெடுப்புக்கு நிர்ப்பந்திக்கலாம் என்பது குறித்து அப்போது விரிவாக ஆராயப்பட்டது. அதனால் அதனை அப்படியே தொடாமல் விட்டு விட்டு அந்த 19 ஆவது திருத்தத்தை முன்னெடுக்க அப்போது தீர்மானிக்கப்பட்டது. அது அப்போதைய பிரதமரான ரணில் விக்ரமசிங்கவுடனும் விளக்கமாக கலந்தாலோசனை செய்து முடிவு செய்யப்பட்ட விடயம். அவரும் அதற்கு இணங்கினார். அதன் பேரிலேயே 19ஆவது திருத்தத்தை பிரதமராக அவரே நாடாளுமன்றத்தில் முன்மொழிந்து அதனை நிறைவேற்ற வழி செய்தார்.

இவ்வளவையும் செய்துவிட்டு, வந்து, சரத்து 83 (ஆ) பிரிவு மாற்றப்படாதமைக்கு ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்னவின் தவறு காரணம் என்று புதுக் கதை விடுகின்றார் ரணில் விக்கிரமசிங்க என்று அந்த விடயத்தை கையாண்ட இரண்டு ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஜயம்பதி விக்கிரமரத்னவும் சுமந்திரனும் அம்பலப்படுத்துகின்றனர்.

இதுதான் வழமையான ரணில் விக்கிரமசிங்கவின் அற்பத்தனமாக போக்கு.



# புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியில் திறன் வகுப்பறையில் கல்விச் செயற்பாடுகள்

1846 ஆம் ஆண்டில் சங்கர ஐயர் கதிர்காம ஐயரால் ஆயக்கடவை சித்தி விநாயகருக்கு முன்பாக தோற்றுவிக் கப்பட்டு 1927 இல் சேர் பொன் இராம நாதனால் அடிக்கல் நடப்பட்டுகட்டி எழுப் பப்பட்ட புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை செயற்பாடுகள் இந்தப் பாடசாலை சமூகத்தினரின் முன் னிலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இரட்ணம் பவுண்டேசன் ஸ்தாபகர் வைத்தியக்கலாநிதி இரட்ணம் நித்தியானந்தத்தின் வழிகாட்டலில் லண்டனைச் சேர்ந்த பாரத கலால யத்தின் ஐங்கரன் தம்பதியினர் அனைத் துலக மருத்துவ நல அமைப்புடன் இணைந்து திறன் பலகை ஒன்றை வழங்கியதன் மூலம் இந்தப் பாடசாலை ஆசிரியர், மாணவர்களின் இடைவினை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.



இப்பாடசாலையின் அதிபர் சி.சிவகு மார் மற்றும் அழகியல் பாட ஆசிரியர் திருமதி கருணரூபினி குணநிதி ஆகியோ ரின் வேண்டுதலில் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தினரின் நேரடிப் பங்களிப்பில் இது நிறைவேறி யுள் ளது.

இதன் ஆரம்ப வைபவத்தில் அனைத் துலக மருத்துவ நல அமைப்பின் இலங் கைக்கான பணிப்பாளர் முத்து இராதா கிருஸ்ணன், முன்னாள் பணிப்பாளர் கிருஷ்ணகுமார் மற்றும் வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சஞ்சீவன் ஆகியோருடன் இந்தப் பாடசாலையின் கல்விச் சமூகத்தினரும் இணைந்து கொண்டனர்.





# மட்டு.35 ஆம் கிராம மாரியம்மன் ஆலய தீமிதிப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் 35 ஆம் கிராமத்தில் அருள்பாலிக்கும் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தீமிதிப்பு வைபவம் நேற்று சனிக்கிழமை (20) பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

இதன்போது நூற்றுக் கணக்கான பக்த அடியவர்கள் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றும் பொருட்டு தீமிதிப்பில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வைக் காண மாவட்டத்தின் பல பிரதேசங்களிலிருந்து மக்கள் வருகை தந்ததைக் காண முடிந்தது.









# பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இலங்கை நீர் எக்ஸ்போ கண்காட்சிக் கூடம்

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ் )

இலங்கை நீர் எக்ஸ்போ - 2024 கண்காட்சி கூடத்தினை ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் ஜீவன் தொண்டமான்.

இந்த நிகழ்வானது, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (19) நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

இந்த கண்காட்சியின் நோக்கம் "நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்துக்குச் செயலூக்கமான வலையமைப்பினை தடங்கள் இன்றி வழங்குதல் மற்றும் உலகளாவிய நீர் நெருக்கடிக்கான தீர்வுகளை அடைவதில் ஒன்றிணைந்து பணியாற்றுதல் ஆகும்.

இலங்கை நீர் மற்றும் கழிவு நீர் துறையில் வணிக வாய்ப்புகளை ஆராய்ந்து அறிவைப் பகிர்வதற்கும், கண்டுபிடிப்பதற்கும் சரியான வணிகத் தளத்தை உருவாக்கவும், கடல் சந்தைகள் போன்றவற்றில் இலங்கையின் மிகப் பெரிய வர்த்தக பங்காளியாக இந்தியா திகழ்கின்றது.

இதன் மூலம் இந்திய மற்றும் இலங்கையின் நீர் மற்றும் சந்தை வாய்ப்புகளுக்குக் கூடுதல் நன்மையை வழங்குகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு தீர்வு வழங்குநர்கள் ஒன்றிணைந்து எல்லைகளைத் தாண்டி வணிக மற்றும் வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் நீண்ட கால மூலோபாய கூட்டணிகள் மற்றும் கட்டமைப்புகளில் கவனம் செலுத்துவதற்கு இந்த திட்டமானது பங்காற்றுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், நீர் வழங்கல் அமைச்சின் திட்டமிடல் மேலதிக செயலாளர் சுகத் தர்மகீர்த்தி, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பிரதி தலைவர் சஞ்ஜீவ விஜயகோன், அமைச்சின் பிரத்தியேக செயலாளர் மொகமட் காதர், சமூக நீர் வழங்கல் பிரதி பணிப்பாளர் ஆனந்த குமார மாபா, ஐ.ஓ.என். நிறுவனத் தலைவர் சாஹில் சாகா, ஐ.ஓ.என். நிறுவன நிறைவேற்று பிரதித் தலைவர் சந்தீப், இலங்கை சோலர் கைத்தொழில் சங்க தலைவர் உபய வர்தன மற்றும் பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.







# கினிகத்தேன தியகல பகுதியில் தீப்பிடித்து எரிந்து நாசமான கார்!

(மஸ்கெலியா நிருபர்)

கொழும்பு – ஹட்டன் வீதியின் கினிகத்தேன தியகல பகுதியில் கார் ஒன்று தீப்பிடித்து எரிந்ததால் அந்த வீதியில் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

நேற்று (20) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாணந்துறையில் இருந்து நுவரெலியா நோக்கிச் சென்ற இந்த கார் கினிகத்தேன தியகல பகுதியில் திடீரென தீப்பிடித்து எரிந்தது. இதன் போது இந்தக் கார் ஒன்று முற்றாக எரிந்து நாசமானது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த கினிகத்தேனை பொலிஸ் அதிகாரி,

நேற்று பாணந்துறையிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்ற கார் ஒன்று கினிகத்தேன தியகல பிரதேசத்தில் தீப்பிடித்து எரிந்துள்ளது.

தீயால் கார் முற்றாக எரிந்து நாசமானது. தீ விபத்து ஏற்பட்ட போது காரில் ஐந்து பேர் கொண்ட குழு பயணித்துள்ளது. அவர்கள் காரில் இருந்து இறங்கிய போது ஒருவருக்கு மட்டும் சிறு தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. ஏனையவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.இந்த தீ விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவித்தார்.



# மாணவர் தலைவருக்குச் சின்னம் சூட்டல்

(எஸ். இரவீந்திரன்)

இரத்தினபுரி, பெல்மதுளை கோட்டக் கல்விப் பணிமணையின் கீழ் இயங்கும் போபெதாத தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு, மாணவர் தலைவருக்கான சின்னம் சூட்டும் விழா நேற்று (20) பாடசாலை அதிபர் சாமுவேல் சிவபாலன் தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியான கோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி சாமினி கலந்து கொண்டார்.







# தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவது எமது நோக்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டமைகிறது. விவசாயம், தொழில் நடவடிக்கைகள் மற்றும் சேவைகளே நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் காரணிகளாகும். ஒரு நாடானது தனக்கென உற்பத்திச் சுழற்சியைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட கால கட்டத்தில் ஆடைத் தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்டு இது முன்னெடுக்கப்பட்டிருந்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 332 ஆவது கட்டமாக 11 லட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன கம்பஹா, கட்டான, மினுவாங்கொட ஹீனட்யன, தம்மாலோக மகா வித்தியாலத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒரு நாடாக, பொருளாதார வளர்ச்சி பல அம்சங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும். சேவைகள், சுற்றுலா, விவசாயம், உற்பத்தி போன்ற பல பொருளாதார நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்து வருகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களே அதிக பங்களிப்பை வழங்கி வருவது இப்போது புதிய போக்காக அமைந்து காணப்படுகிறது.

பல்வேறு வேலை வாய்ப்புகளை வழங்கிக் கொண்டு, இவர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 வீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை நல்கி வருகின்றனர். எனவே இதனைக் கருத்தில் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தி அரசில் ஒரு மில்லியன் புதிய தொழில்முயற்சியாண்மைகளையும் தொழில் முனைவோரையும் உருவாக்குவோம்.

மூலதனத்தை வழங்கி, சலுகைகளை வழங்கி, தற்போதுள்ள தொழில் முயற்சியாண்மைகளைப் பாதுகாத்துக் கொண்டு, மேலும் பல புதிய தொழில்களை உருவாக்க நடவடிக்கை எடுப்பேன்.

பராட்டே சட்டத்தை ஒழிப்பதற்கான பயணத்தின் முன்னோடியாக, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் 4 ஆண்டுகளாக தர்க்க ரீதியாக விடயங்களை முன்வைத்து, பராட்டே சட்டத்தை பின்தள்ளி தொழில் நடவடிக்கைகளை பாதுகாத்துத் தந்தது. பழைய தொழில்கள் பாதுகாக்கப்படுவது போல், புதிய தொழில்களும் உருவாக்கப்பட வேண்டும்.

தகவல் தொழில்நுட்பம் கற்கும் புதிய தலைமுறையினர், தொழில் முனைவோராக மாறி, தகவல் தொழில் நுட்பத்துறையில் ஏற்றுமதியை ஊக்குவிக்கக் கூடிய ஆற்றலை கொண்டவர்களாக மாற்றுவதே ஐக்கிய மக்கள் சக்தியின் கனவாகும்.

எனவே, தகவல் தொழிநுட்ப தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் தொழில் முனைவோரை உருவாக்குவதில் நாம் கவனம் செலுத்துவோம். எமது நாட்டின் திறமையான தொழிலாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அனுப்ப வேண்டும் என்பதனால், மிக உயர்ந்த தகவல் தொழில்நுட்ப திறன் கொண்ட பணியாளர்களை நாம் உருவாக்க வேண்டும்.

ஒரேயொரு தொழிலாளர் பிரிவினர் மூலம் அந்நியச் செலாவணியைப் பெறுவதற்குப் பதிலாக, முன்னேற்றம் கண்டுள்ள பல்வேறு துறைகளில் இருந்து அந்நியச் செலாவணியைப் பெற்று, பொருளாதாரத்தை படிப்படியாக மேம்படுத்தும் வகையில் புதிய தேசியத் திட்டத்தை வகுப்பேன்.

சகல பிரதேச செயலகத்திலும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை உருவாக்குவேன். தகவல் தொழிநுட்பக் கல்வி கட்டாயப் பாடமாக மாற்றப்படும்.- என்றார்.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி நிதியத்துக்கு ஒரு லட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.







# ஆரையம்பதி பேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம்!

(பழுவூரான்)

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க பேச்சியம்மன் ஆலயங்களுள் ஒன்றான மட்டக்களப்பு ஆரையம்பதி ஸ்ரீபேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று சனிக்கிழமை (20) திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ள பள்ளையச் சடங்கு மற்றும் சமுத்திரத் தீர்த்தோற் சவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

இதன்போது 23 ஆம் திகதி கும்ப ஊர்வலச் சடங்கும், 25 ஆம் திகதி வீரகம்பம் வெட்டுதலும் பலிச்சடங்கும் நடைபெறவுள்ளன.

ஆலய உற்சவக் கிரியைகள் யாவும் ஆலய பிரதம பூசகர் சிரோன்மணி சக்தி ஸ்ரீ பூ.மகேந்திரராஜா தலைமையில் உதவிப் பூசகர்களான சக்திஸ்ரீ ம.முரளிதரன் மற்றும் சக்திஸ்ரீ பா.அருணன் ஆகியோரால் நிகழ்த்தப்படுகின்றது.





# கதிர்காமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தங்க நுழைவாயிலில் நாளை தீர்த்தம்!

(வி.ரி. சகாதேவராஜா)

கதிர்காமத்தில் மாணிக்க கங்கைநதி தீரத்தில்அழகாக நிர்மாணிக்கப்பட்ட தங்க நுழைவாயில் திறக்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தங்க நுழைவாயில் ஊடாகச் சென்று நாளை (22) திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம் பெறவுள்ளது.

இதற்காக லட்சோப லட்சம் மக்கள் அங்கு ஒன்றுகூடியுள் ளனர். மக்கள் வெள்ளம் அங்கு அலைமோதுகிறது.

கதிர்காம தேவாலய நிலமே திஷான் குணசேகர தலைமையில் இந்த முதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மிகவும் அழகாக நிரு மாணிக்கப்பட்டுள்ள இந்த நுழைவாயிலூடாக யானைகள் சகிதம் பேழை எடுத்து செல்லப்பட்டுத் தீர்த்தோற்சவம் இடம் பெறும்.







# ஓட்டமாவடி பாத்திமா பாளிகா வித்தியில் கற்பித்த ஆசிரியர்களுக்குக்கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கற்பித்த ஆசிரியர்களைக் கௌரவிக்கும் முன்மாதிரியான நிகழ்வு ஓட்டமாவடி பாத்திமா பாளிகா மகா வித்தியாலயத்தில் 2000 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை எழுதிய மாணவிகளின் ஏற்பாட்டில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 2000 ஆம் ஆண்டு ஓட்டமாவடி பாத்திமா பாளிகா மகா வித்தியாலயத்தில் இருந்து கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோன்றிய அனைத்து மாணவிகளும் கலந்து கொண்டனர்.

இதன் போது தங்களுக்கு தரம் 1 தொடக்கம் 11 வரை கற்பித்த ஆசிரிய, ஆசிரியைகள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர். மாணவிகளின் கவிதை, பாடல், பேச்சு எனப் பல்வேறு நிகழ்ச்சிகளும் ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன.

இதன் போது 2000 ஆம் ஆண்டு சாதாரண தர மாணவிகளால் சேர்க்கப்பட்ட ஒரு தொகைப் பணமும் பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்காக பிரதி அதிபர் ஏ.எல்.எம்.அஸ்கரிடம் கையளிக்கப்பட்டது.





# போதைப்பொருள் ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வு கல்முனையில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

“டயக்கோனியா” மற்றும் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அனுசரணையில் போதை ஒழிப்பு தொடர்பான நிகழ்ச்சிகள் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

திட்ட இணைப்பாளரும், இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபருமான . ஏ. ஜி .எம். நிசாத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இளைஞர் யுவதிகள் மத்தியில் எவ்வாறு போதை பாவனை பரவலாக்கப் படுகின்றது, அவை எவ்வாறான முறைகளில் விஸ்தரிக்கப்படுகின்றது என்பது தொடர்பான நாடகங்கள், போதையால் உண்டாகும் தீமைகள் , அதில் நாம் எவ்வாறு பாதிக்கப் படுகின்றோம் என்பதை எடுத்துக் காட்டும் வில்லுப்பாட்டு மற்றும் இஸ்லாமிய கசீதா , உரையாடல் என பல நிகழ்வுகள் மாணவர்களால் மேடையேற்றப்பட்டன.



இந்த நிகழ்வுக்கு அதிதிகளாக கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பொதுப் பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ. வாஹிட், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ.சீ.ஏ.அசிஸ் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

காரைதீவு விவேகானந்தா மத்திய கல்லூரி, கல்முனை அல் பஹ்றியா மகா வித்தியாலயம், கல்முனை இராம கிருஷ்ணமிசன் மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகாவித்தியாலயம், மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி மற்றும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மாகா வித்தியாலயம் ஆகிய ஏழு பாடசாலைகள் இதில் கலந்து கொண்டு ஆக்கங்களை வெளிப்படுத்தின.





# மலையக, பெருந்தோட்ட உழைக்கும் மக்களுக்கு தேயிலை தோட்டம் மற்றும் வீட்டுக்கான உரிமை!

## பெற்றுத் தருவேன் என்கிறார் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

அண்மைக் காலங்களில் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் சகலரும் மலையக, பெருந்தோட்ட சமூகத்தை பொய்யான கூற்றுக்களாலும், வாக்குறுதிகளாலும் ஏமாற்றி வந்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பெருந்தோட்ட மக்களின் லயன் அறை வடிவிலான இருப்பிட வசதிகளாலான வாழ்க்கை முறையையும், தோட்டத் தொழிலாளர்கள் என்ற வாழ்க்கையையும் முடிவுக்குக் கொண்டு வருவோன்.

சிறிய தேயிலைத் தோட்டத்துக்கான உரிமையாளர்களாக்கி, தனது சொந்த தேயிலை தோட்டத்தில் தனக்கென சொந்த வீட்டை நிர்மாணித்து, தேயிலை தோட்டத்தை பராமரித்து, சிறுநில தேயிலைத் தோட்ட உரிமையாளராக தேயிலை உற்பத்திக்கு பங்களிப்பதற்கான வரத்தைப் பெற்றுத் தருவேன்.

நிறைவேற்றப்படாத பல தேவைகளையும், தரங்குன்றிய வாழ்க்கை முறையையும் முடிவுக்குக் கொண்டு வருவேன். தேசிய நீரோட்டத்தில் அவர்களைச் சங்கமிக்கச் செய்வேன். அதனாலேற்படும் முன்னேற்றங்களால் பாராபட்சங்களை நீக்கி, செந்த காலில் நிற்கும் யுகத்தை பெருந்தோட்ட மக்களுக்கு உருவாக்கித் தருவேன்

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 336 ஆவது கட்டமாக 11 லட்சத்து 77 ஆயிரம் ரூபா



பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன களுத்துறை, ஹொரண, இங்கிரிய விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (18) இடம் பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி நிதியத்துக்கு ஒரு லட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டில், சிறு தேயிலைத் தோட்டங்களுக்கு 40 வீதமான காணியே சொந்தமாக உள்ளது. ஆனால் அவை மொத்த தேயிலை உற்பத்தியில் 70 வீதமான பங்களிப்பை வழங்கி வருகின்றன. அரசுக்கும், தனியாருக்கும் சொந்தமான 60 வீதமான காணியை வைத்திருப்பவர்கள் தேயிலை உற்பத்திக்கு 30 வீதமான பங்களிப்பையே செய்து வருகின்றனர்.

மலையக மற்றும் பெருந்தோட்ட சமூகங்களுக்கு செய்கைகள் மேற்கொள்ளப்படாத காணிகளைக் கொடுத்து அவர்களை வீட்டு உரிமையாளராகவும், தோட்ட உரிமையாளராகவும் மாற்றும் யுகத்தை நாம் உருவாக்கித் தருவோம்.

சில நன்மைகளை மட்டுமே அனுபவித்து வரும் இந்தச் சமூகத்துக்கு நாட்டின் ஏனைய பிரதேச மக்கள் அனுபவித்து வரும் பல நன்மைகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன். ஒப்பீட்டு ரீதியில் பின்தங்கிய நிலையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பேன்.

வீட்டுவசதி, கல்வி, போக்குவரத்து, மின்சாரம், சுகாதாரம் போன்றவற்றில் அபிவிருத்தியை ஏற்படுத்தி வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பேன். பெருந்தோட்ட வறுமையை நீக்குவதற்கான ஏற்பாடுகளை ஆரம்பிப்பேன்.

மலையக மற்றும் பெருந்தோட்ட மனித வளங்களின் இயலுமைகளையும் ஆற்றல்களையும் கட்டியெழுப்பி, நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்பை நல்குவோராக மாற்றும் நடவடிக்கையை முன்னெடுப்பேன்.

பெருந்தோட்டத்துறை பாடசாலை முறைமையை கட்டியெழுப்புவேன். இதற்கான விசேட வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பேன். ஆசிரியர் பற்றாக்குறைக்கும், பௌதீக வளப் பற்றாக் குறைக்கும், மனித வளப் பற்றாக் குறைக்கும் தீர்வுகளை பெற்றுத் தருவேன் .- என்றார்.







# திருக்கோவில் காயத்திரி கிராமத்தில் 25 வீடுகளை நிர்மாணிக்க அடிக்கல்

(வி.ரி. சகாதேவராஜா)


திருக்கோவில் பிரதேசத்திலுள்ள காயத்திரி கிராம மக்களுக்கான 25 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அடிக் கல் நடும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நேற்று (20) சனிக்கிழமை காயத்திரி கிராமத்தில் நடைபெற்றது.

இந்த வீடுகள் திருக்கோவில் பிரதேச செயலாளர் த .கஜேந்திரனின் வேண்டு கோளுக்கு அமைவாக, மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் 1989 - 1990 காலப் பகுதியில் கல்வி கற்று தற்போது கனடாவில் வசித்துவரும் நிதி வழங்கு னர்கள் இணைந்து அமைத்து வழங்க வுள்ளனர்.



இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சி. ஜெகராஜன் கனடா நிதி வழங்கும் அமைப்பின் தலைவர் அமைப்பின் தலைவர் இளங் குமரன், வீ கான் மற்றும் மன்னார் மாவட்ட மாற்று திறனாளிகள் அமைப் பின் இணைத்தலைவர் பி.றோபட், திருக்கோவில் பிரதேச உதவி செயலா ளர் திருமதி எஸ்.நிருபா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உஷாந்த், கிராம நிர்வாக உத்தியோத்தர் என்.கந்தசாமி, வீட்டுத் திட்ட இணைப்பாளர் எஸ்.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த வீடுகள் அமைப்பதற்காகப் பிரதேச செயலகத்தால் காணிகளும் இலவசமாக மக்களுக்கு வழங்கப்பட்டன.



# மட்டக்களப்பு கோட்டைக்கு வந்து குவியும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பில் ஏராளமான சுற்றுலாப் பயணிகளின் கவ னத்தை ஈர்த்துள்ள சுற்றுலாத் தளமாக மட்டக்களப்பு கோட்டை விளங்குகின்றது.

வரலாற்றுத் தொன்மை வாய்ந்த விடயங்களில் ஏரா ளமானவை மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்றன.

இதுவரை காலமும் இந்தக் கோட்டையினுள் அமைந்திருந்த மட்டக்களப்பு மாவட்ட செயலகம் பிறிதொரு இடததுக்கு மாற்றப்பட்டதை அடுத்து இந்த இடத்தைச் சுற்றுலாத் தளமாக மெருகூட்டியுள்ளனர்.

முன்னைய நாள்களிலும் இது ஒரு சுற்றுலாத்தளமாக இருந்தாலும் மக்களினுடைய வருகை என்பது குறைவாகவே காணப்பட்ட நிலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

இதேவேளை பண்டைய மன்னர் காலத்தில் பயன் படுத்தப்பட்ட பொருள்களைக் காட்சிப்படுத்துகின்ற நூ தனசாலையாகவும் இந்தக் கோட்டை மாற்றம் பெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

### குஜராத்தில் கடும் வெப்பம்:

# எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் 2 பேர் உயிரிழப்பு

குஜராத்தில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக எல்லைப் பாதுகாப்புப் படையை சேர்ந்த 2 வீரர்கள் உயிரிழந்தனர்.

குஜராத்தில் இந்தியா-பாகிஸ்தான் சர்வதேச எல் லைக்கு அருகே உள்ள ‘ஹராமி நல்லா’ சிற்றோடை பகுதியில் எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் இருப்பர். எல் லைப் பகுதி என்பதால் இந்தப் பகுதியில் வீரர்கள் தொடர்ந்து ரோந்து சுற்றி வருவர்.

இந்த நிலையில் கடந்த சில நாள்களாக இப்பகுதியில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. மேலும் அனல் காற்றும் வீசி வருகிறது.

இந்தநிலையில் இப்பகுதியில் ரோந்து பணியில் ஈடு பட்டிருந்த எல்லை பாதுகாப்புப்படை அதிகாரி மற்றும் வீரர் ஒருவர் நேற்று முன்தினம் கடும் வெப்பம் காரண மாக மயங்கி விழுந்தனர்.

இதையடுத்து அவர்கள் 2 பேரையும் மீட்டு பூஜ்



பகுதியில் உள்ள சுகாதார மையத்துக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர்கள் ஏற்கெனவே உயிரிழந்து விட்டனர் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இருவருக்கும் வெப்ப பக்கவாதம் மற்றும் நீரிழப்பு ஏற்பட்டதால் மரணம் ஏற்பட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். உயிரிழந்தவர்கள் உதவி கொமாண்டண்ட் விஸ்வதேவ், ஹெட் கான்ஸ்டபிள் தயாள் ராம் எனத் தெரியவந்துள்ளது.

# தி.மு.க. அரசை எதிர்த்து போராட்டம்: பா.ம.க. தலைவர் அன்புமணி அறிவிப்பு

தி.மு.க. அரசுக்கு எதிரான போராட் டத்துக்கு பா.ம.க. தலைவர் அன்புமணி அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அன்புமணி தனது எக்ஸ் தளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில்,

“மக்களையும், தொழில் துறையி னரையும் கடுமையாக பாதிக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ள மின் கட்டண உயர்வைக் கண் டித்து சென்னையில் போராட்டம் நடத்தியதற்காக என் மீதும், 100 இற் கும் மேற்பட்ட பா.ம.கவினர் மீதும் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள் ளனர். இது கண்டிக்கத்தக்கது.

போராட்டத்தின்போது, மின்சார வாரியத்தில் நடைபெறும் ஊழல்கள்



குறித்தும், செயல்படுத்தப்படாத மின்திட்டங்கள் குறித்தும் ஆதாரங் களுடன் விளக்கினேன். அவை மக்க ளிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளன. அதை தாங்கிக் கொள்ள முடியாமல்தான் பாமகவினர் மீது பொய் வழக்கு பதிவு செய்யுமாறு தி.மு.க. அரசு தூண்டியுள்ளது.

கடந்த 3 ஆண்டுகால திமுக ஆட்சி யில் 5,000 படுகொலைகள் நிகழ்ந்திருக் கின்றன. அவற்றைத் தடுக்க பொலி ஸாரால் முடியவில்லை. கள்ளச்சா ராய சாவுகளையோ, கஞ்சா விற்ப னையையோ கட்டுப்படுத்த முடிய வில்லை. ஆனால், மின் கட்டண உயர்வைக் கண்டித்து போராட்டம் நடத்தினால், வழக்கு பதிவு செய்கிறது.

மின் கட்டண உயர்வைக் கண்டித் தும், தி.மு.க. அரசின் மக்கள் விரோத செயல்பாடுகளை எதிர்த்தும் பா.ம.க. சார்பில் தொடர்ந்து போராட்டங்கள் நடத்தப்படும். சென்னையில் போராட் டம் நடத்தியதற்காக பொலிஸார் தொடர்ந்துள்ள பொய் வழக்கை, சட்டப்படி எதிர்கொள்வோம்.”- என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரதமர் மோடி தலைமையில் ஜூலை 27 இல் கூடும் நிதி கூட்டத்தில் பங்கேற்க முதல்வர் டில்லி பயணம்

பிரதமர் நரேந்திர மோடி தலை மையில் எதிர்வரும் 27 ஆம் திகதி டில்லியில் நிதி ஆயோக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்தில் பங்கேற்க முதல்வர் மு.க.ஸ்டாலின் டில்லி செல்கிறார்.

பா.ஜ.க. 2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு, திட்ட கொமிஷனுக்குமாற் றாக நிதி ஆயோக் உருவாக்கப்பட்டது. மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பணிகளில் நிதி ஆயோக் ஈடுபடுகிறது.

இந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான 9 ஆவது நிதி ஆயோக் கூட்டம் டில்லியில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெற வுள்ளது. மோடி மூன்றாவது முறை யாக பிரதமர் பதவியேற்ற பின்னர் நடைபெறும் முதல் கூட்டம் இதுவா கும். இதில் மாநில முதல்வர்கள்,



யூனியன் பிரதேசங்களின் துணை நிலை ஆளுநர் மற்றும் மத்திய அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்க வுள்ளனர்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக, எதிர்வரும் 26 ஆம் திகதி இரவு அல் லது 27 ஆம் திகதி காலை சென்னை யில் இருந்து விமானம் மூலம் டில்லி செல்லவுள்ளார் என தகவல் வெளி யாகியுள்ளது.

மத்திய அரசின் நிலுவைத் தொகை, நிதி, தமிழக நலன் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கூட்டத்தில் பேச இருக்கின்றார் என கூறப்படு கிறது. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, கேரள முதல்வர் பினராயி விஜயன், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உள்ளிட்டோரும் நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் நிதி ஆயோக் 2023-24 ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக் கையை வெளியிட்டது. அதில், நீடித்த நிலையான வளர்ச்சி குறியீடுகளில் பெரும்பாலானவற்றில் தமிழகம் முன்னிலை பெற்றுள்ளதாகவும், வறுமை ஒழிப்பில் 92 புள்ளிகளுடன் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப் பிடத்தக்கது.

# பலஸ்தீன பகுதிகளில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு சட்டவிரோதமானது

## சர்வதேச நீதிமன்றம் தெரிவிப்பு






பலஸ்தீன பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பதும், அங்கு குடியேற்றம் செய்வதும் சட்டவிரோதமானது என்பதால் அதனை விரைவில் திரும்பப் பெற வேண்டும் என சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவினை, சர்வதேச நீதிமன்றம் நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளது.

இதற்கமைய, சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிகளின் ஆலோசனைக் கருத்தின் காரணமாக, சர்வதேச சட்டத்தின் கீழ் இஸ்ரேலுக்கான ஆதரவு பலவீனப்படுத்தப்படலாம்.

அதேவேளை, சர்வதேச நீதிமன்றத்தின் தலைவர் நவாஃப் சலாம், பலஸ்தீனப் பிரதேசத்தில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு குறித்து 15 நீதிபதிகள் கொண்ட குழு வழங்கிய கட்டுப்பாடற்ற ஆலோசனைக் கருத்தை நேற்று முன்தினம் வாசித்துள்ளார்.

இருப்பினும், சர்வதேச நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவை மறுக்கும் விதத்தில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், யூத மக்கள் தங்கள் சொந்த நிலத்தினை ஆக்கிரமிப்பவர்கள் அல்ல, எமது நித்திய தலைநகரான ஜெருசலேமிலிலோ, யூதேயாவிலோ மற்றும் சமாரியாவில் உள்ள எங்கள் முன்னோர்களின் நிலத்திலும் நாங்கள் ஆக்கிரமிப்பாளர்கள் இல்லை என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பல இஸ்ரேலிய அரசுப் பேரவையின் அமைச்சர்கள் மற்றும் குடியேறிய தலைவர்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பை கடுமையாக கண்டித்துள்ளனர். அதுமாத்திரமன்றி, சிலர் இதற்கு பதிலடியாக மேற்கு கரையை உடனடியாக முறையாக இணைக்க வேண்டுமென்று அழைப்புவிடுத்துள்ளனர்.

இந்த நிலையில், மே மாதம், தெற்கு காசாவின் ரஃபா மீதான தாக்குதலை நிறுத்துமாறு சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவிட்டிருந்தது. இருப்பினும், நீதிமன்றத்தை மீறி காசா, ரஃபா உள்ளிட்ட இடங்களில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்பை கொலை செய்ய முயற்சித்தவரிடம் பிரித்தானிய இளவரசி கேட்டின் புகைப்படம்





அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பைக் கொலை செய்ய முயன்ற நபர், பிரித்தானிய ராஜ குடும்ப உறுப்பினர் ஒருவர் தொடர்பில் இணையத்தில் தேடியுள்ளார் என கவலொன்று வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருப்பவருமான டொனால்ட் ட்ரம்பை, தோமஸ் க்ருக்ஸ் என்பவர் கொலை செய்ய முயன்ற சம்பவம் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

இந்த நிலையில், அதிகாரிகள் தோமஸ் வீட்டை சோதனையிட்டபோது, அவரது தொலைபேசியில் அவர் ராஜ குடும்ப உறுப்பினர் ஒருவரைக் குறித்து தேடியமை கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த ராஜ குடும்ப உறுப்பினர் பிரித்தானிய இளவரசியும், வருங்கால ராணியுமான கேட் என்பது தற்போது தெரியவந்துள்ளதாக அமெரிக்க வானொலியொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அவர், இளவரசி கேட்டின் புகைப்படங்களை தனது தொலைபேசியில் சேமித்து வைத்திருந்துள்ளார்.

தோமஸ் ட்ரம்பைக் கொலை செய்ய முயன்றதற்கு அடுத்த நாள், இந்த அதிர்ச்சியை ஏற்படுத்தும் தகவல் குறித்து எதுவும் தெரியாமலே, இளவரசி கேட் விம்பிள்டன் இறுதிப் போட்டியைக் காண சென்றிருந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# உக்ரைனுக்கு வழங்கும் உதவியை பாதியாக குறைக்கின்றது ஜேர்மனி



உக்ரைனுக்கு ஜேர்மனியால் வழங்கப்பட்டு வரும் உதவியை பாதியாக குறைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் படி, ஜேர்மனியின் வரைவு ஒதுக்கீட்டால் உக்ரைனுக்கு வழங்கப்பட்டு வந்த 8 பில்லியன் யூரோ நிதி உதவி, 4 பில்லியன் யூரோக்களாக குறைக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு அதிக அளவில் நிதி உதவி செய்து வந்த நாடுகளில் ஜேர்மனி இரண்டாவது நாடு என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால், உக்ரைனுக்கு அமெரிக்காவால் வழங்கப்பட்டு வரும் உதவிகள் நிறுத்தப்படலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

எனினும், ரஷ்ய உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவேன் ட்ரம்ப் நேற்று அறிவித்திருந்தார்.

மேலும், ரஷ்யாவுக்கு எதிராக பிரித்தானிய ஆயுதங்களை பயன்படுத்துவதற்கான உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் ஜெலன்ஸ்கியின் கோரிக்கையை பிரித்தானியா நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

பக்கங்கள் - 6

ஞாயிற்றுக்கிழமை 21/07/2024

## கர்ப்பிணியும் குழந்தையும் விபத்தில் உயிரிழந்தனர்!

**ஒன்ராரியோ, ஜூலை 21**

இந்த வார தொடக்கத்தில் டொரான்டோ டவுன்டவுனில் செடான் வாகனத்தால் தாக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணின்

C2 ▶



# கோடை காலத்தின் இறுதிக்குள் பெரும் அமைச்சரவை மாற்றம்?

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தயாராகின்றாராம்




ஒன்ராரியோ, ஜூலை 21

**கோடை காலத்தின் இறுதிக்குள் பெரும் அமைச்சரவை மாற்றம் ஒன்றைப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவிப்பார் என ஊகங்கள் வெளியாகியுள்ளன.**

**இங்கிலாந்து வங்கியின் முன்னாள் ஆளுநர் மார்க் கார்னேயை அரசியலுக்கு அழைத்து வரும் முயற்சியில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஈடுபட்டுள்ளார் எனச் செய்திகள் வெளியான நிலையில்தான் அமைச்சரவை மாற்றம் குறித்த ஊகங்களும் வெளியாகியுள்ளன.**

**நிதி அமைச்சில் கிறிஸ்டியா ப்ரிலேன்டிற்குப் பதிலாக மார்க் கார்னேயை நியமிப்பது குறித்த உரையாடல்கள் நிகழ்கின்றன என செய்தி வெளியாகியிருந்தது.**

C2 ▶



மார்க் கார்னே

# இந்தியத் தம்பதியருடன் முரட்டுத்தனமாக நடந்து கொண்ட விமான சேவை நிறுவனம்

**ஒன்ராரியோ, ஜூலை 21**

கனடாவில், விமான நிறுவனம் ஒன்று ஒரு இந்தியத் தம்பதியருக்கு விமானத்தில பயணிக்க மறுப்பு தெரிவித்ததால் அவர்கள் கோபமடைந்த சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

வெஸ்ட்ஜெட் விமான நிறுவனத்தின் விமானம் ஒன்றில், ரொரன்றோவிலிருந்து வான்கூவருக்கு பயணிக்க டிக்கெட் முன் பதிவு செய்துள்ளார்கள் போரூர் குமணன், கல்பனா தம்பதியர்.

விமானத்தில் ஏறுவதற்காக செல்லும்போது, அவர்கள் கையில் வைத்திருந்த அனுமதிக்கப்பட்ட அளவிலான பைகளுடன் அவர்கள் விமானத்தில் ஏற பணியாளர் ஒருவர் அனுமதி மறுத்துள்ளார்.

தங்களுக்குத் தேவையான மருந்துகளும்

C2 ▶





# மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயம்

**ஒன்ராரியோ, ஜூலை 21**

நேற்றிரவு ஸ்கார்பரோவில் மோட்டார் சைக்கிள் ஒன்று மரத்தில் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்துள்ளார்.

ஷெப்பர்ட் அவென்யூ கிழக்கின் வடக்கே நகெட் அவென்யூ மற்றும் மார்க்கம் வீதி பகுதியில் ஒரு ஒற்றை வாகன விபத்து தொடர்பில் இரவு 9:53 மணிக்கு தங்களுக்கு அழைப்பு வந்ததாக டொரன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்துக்கான காரணம் தெரியவில்லை.

## இந்தியத் தம்பதியருடன்...

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

விலையுயர்ந்த நகைகளும் பையில் இருப்பதால், பையை சரக்குகள் வைக் கும் இடத்தில் வைக்க இயலாது என குமணன் கூற, இந்த விமான நிறுவ னத்தின் விமானத்தில் இனி நீங்கள் ஒருபோது பயணிக்க முடியாது என்று கூறியிருக்கிறார் ஒரு பணியாளர்.

வேறு வழியில்லாமல், கடைசி நேரத்தில் ஃப்ளேர் விமான நிறுவன விமானம் ஒன்றில் 1,927 டொலர்கள் செலுத்தி டிக்கெட் வாங்கி பயணித்தி ருக்கிறார்கள் தம்பதியர்.

இந்தச் சம்பவத்தால் கோபமடைந் துள்ள குமணன், நாங்கள் என்ன குற்றவாளிகளா என்கிறார். விமான நிறுவனத்துக்கு நடந்ததை விளக்கி புகார் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள குமணன், டிக்கெட்டுக்கான தங்கள் பணத்தைத் திருப்பித் தருமாறு கோரியுள்ளார்.

வெஸ்ட்ஜெட் விமான நிறுவன செய்-தித் தொடர்பாளரான ஜூலியா கெய்சரை ஊடகங்கள் இந்த புகார் தொடர்பாக தொடர்பு கொண்டபோது, குமணன் தம்ப தியர் தங்கள் விமான நிறுவன விமா னத்தில் பயணிக்க தடையேதும் விதிக் கப்படவில்லை என்று அவர் கூறியுள்ளார்.





அத்துடன், அவர்கள் டிக்கெட்டுக்காக செலுத்திய 800 டொலர்கள் திருப்பிக் கொடுக்கப்படும் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

விமானத்தில் ஏறும்போது அந்த பயணிகள் நடந்துகொண்ட விதம் காரண மாகத்தான் அவர்கள் விமனத்தில் பய ணிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ள தாகவும் ஜூலியா தெரிவித்துள்ளார்.

இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையிலும், முரட்டுத்தனமாகவும் நடந்துகொள்ளும் பயணிகளை வெஸ்ட்ஜெட் நிறுவனம் பொறுத்துக்கொள்வதில்லை என்றும் ஜூலியா கூறியுள்ளார்.

ஆனால், கடைசி நேரத்தில் மற்றொரு விமானத்தில் பயணிக்க நேர்ந்ததால் கூடுதலாக செலவான 1,127 டொலர்கள் குறித்து அவர் எதுவும் கூறவில்லை.

தான் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளவில்லை என்று கூறும் குமணன், தங்கள் மருந்துகளையும் விலையுயர்ந்த நகைகளையும் விமானத்தில் ஏற்ற வேண்டியதன் அவசியத்தை விளக்கி யும் அந்தப் பணியாளர் அதை சட்டை செய்யவில்லை என்றும், ஆகவே, தான் அப்செட் ஆனதால் சத்தமாக பேசினார் எனவும் அவர் தெரிவிக்கிறார்.

ஒரு ஜிப் லாக் பை கொடுத்திருந்தால் கூட போதுமானதாக இருந்திருக்கும், அல்லது அவர்கள் தனக்கு ஏதாவது ஒரு தீர்வு கூறியிருக்கலாம் என்கிறார் அவர்.

அவர்கள் எனக்கு முழு செலவையும் திருப்பிக் கொடுத்தாகவேண்டும் என்றும், அவர்கள் ஏன் அப்படி செய்தார்கள் என் பதற்கு எனக்கு விளக்கமளிக்கவேண்டும் என்றும் கூறுகிறார் குமணன்.

## கர்ப்பிணியும்...

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

குழந்தையும் இறந்துவிட்டதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

ஜூன் 18ஆம் திகதி பிற்பகல் குயின் ஸ்ட்ரீட் ஈஸ்ட் மற்றும் சாக்வில்லி தெரு பகுதியில் நடந்த சம்பவம் குறித்து நேற் றைய தினம் டொரன்டோ பொலிஸார் மேலதிக தகவலை வழங்கியள்ளனர்.

42 வயதான கர்ப்பிணிப் பெண், குயின் ஸ்ட்ரீட் ஈஸ்ட் பகுதியில் பாதசாரி கடவையில் நடந்து சென்றபோது, 70 வயது முதியவர் ஓட்டிச் சென்ற 2017 பிளாக் காடிலாக் செடான் அவர் மீது மோதியுள்ளது.

பலத்த காயங்களுக்கு உள்ளான பெண் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும், அங்கு அவர் உயிரிழந்தார் எனவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

'குழந்தையை பிரசவிப்பதற்கும் காப்பாற்றுவதற்கும் உயிர்காக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன,' ஆனால் வெள்ளிக்கிழமை, குழந்தை உயிரிழந்துள்ளது.

## கோடை காலத்தின்...

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

துணைப் பிரதமருக்கும், பிரதமர் அலு வலகத்துக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் செய்தி வெளியானமை குறிப்பிடத்தக்கது.

இவை அனைத்தும் ஓர் அரசியல் புத் துணர்ச்சியை ஏற்படுத்த பிரதமர் எதிர் கொள்ளும் அழுத்தத்துடன் தொடர்புடை யவை எனக் கூறப்படுகிறது.



# நெடுஞ்சாலை விபத்தில் ஐந்து பயணிகள் காயம்

**ஒன்ராரியோ, ஜூலை 21**

நெடுஞ்சாலை 400இல் நேற்று காலை டிரக் ஒன்றின் மீது வாகனம் ஒன்று மோதியதில் ஐந்து பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்படுள்ளனர்.


நெடுஞ்சாலை 401க்கு அருகில் நெடுஞ்சாலையின் வடக்குப் பாதையில் காலை 7:30 மணிக்குப் பின்னர் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மொத்தம் ஐந்து பேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் தெரியவில்லை.



# பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விடுமுறையில் இன்று பிரிட்டிஷ் கொலம்பியா புறப்பாடு



**ஒன்ராரியோ, ஜூலை 21**

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இன்று பிரிட்டிஷ் கொலம்பியா செல்கிறார்.

ஓகஸ்ட் முதலாம் திகதி வரை அவர் தனது குடும்பத்தினருடன் விடுமுறையில் இருப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு காரணங்களுக்காக குறிப்பிட்ட இடத்தை பிரதமர் அலுவலகம் வெளியிடவில்லை என்று அரசு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

செய்தித் தொடர்பாளர் முகமது ஹசைன் ஒரு மின்னஞ்சலில் ட்ரூடோ தேவைக்கேற்ப அரசு விமானங்களில் பயணிக்கின்றார் எனவும், தனக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஒரு வணிக விமான டிக்கெட்டுக்கு சமமான தொகையை அவர் திருப்பிச் செலுத்துகின்றார் எனவும் கூறுகிறார்.

ட்ரூடோ தனது குடும்பத்தின் தங்கும் செலவையும் செலுத்துவார் என்று ஹசைன் கூறுகிறார்.

இந்தப் பயணம் குறித்து நெறிமுறை ஆணையர் அலுவலகத்துடன் பிரதமர் அலுவலகம் ஆலோசனை நடத்தியுள்ளது.

ட்ரூடோ 2016 ஆம் ஆண்டில் பஹாமாஸில் உள்ள அகா கானின் தனியார் தீவுக்கு விடுமுறையில் சென்றபோது, வட்டி மோதல் விதிகளை மீறினார் எனக் கண்டறியப்பட்டது. மேலும் வழிகாட்டுதல்களுக்கு இணங்குவதை உறுதிசெய்ய தனிப்பட்ட பயணத் திட்டங்களுக்கு முன்னதாக நெறிமுறைகள் ஆணையரிடம் ஆலோசனை செய்வதாக அவரது அலுவலகம் கூறியுள்ளது.

வட்டி மோதல் சட்டம் அரசியல்வாதிகள் அன்பளிப்புகள் மற்றும் பிற நன்மைகளை அவர்கள் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட நெருங்கிய பிணைப்பைக் கொண்ட உறவினர்கள் அல்லது குடும்ப நண்பர்களிடமிருந்து மட்டுமே ஏற்றுக் கொள்ள அனுமதிக்கிறது.

ஜமைக்காவில் கடந்த கிறிஸ்மஸில் ட்ரூடோவின் குடும்ப விடுமுறையும் சர்ச்சையை உருவாக்கியது. அவருடைய அலுவலகம் அவர் தங்குவதற்கு அவர் மற்றும் அவரது குடும்பத்தினர் பணம் செலுத்துகின்றனர் என ஆரம்பத்தில் கூறிய ஓர் அறிக்கையைப் பின்னர் திருத்தியது.

பின்னர் அவர்கள் ஒரு விளக்கத்தை வெளியிட்டனர், பிரதமரும் அவரது குடும்பத்தினரும் எந்தச் செலவும் இல்லாமல் தங்கியிருந்தனர் என்று கூறப்பட்டது

பெரும்பாலான கனேடியர்கள் அடிக்கடி செய்வது போல், அந்த விடுமுறையில் நண்பர்களுடன் தங்கியிருந்தார் எனவும், தேவையான அனைத்து விதிகளையும் அவரது அலுவலகம் பின்பற்றியதாகவும் ட்ரூடோ கூறினார்.

பிரதமர் தனிப்பட்ட பயணமாக இருந்தாலும், பாதுகாப்பு காரணங்களுக்காக ராயல் கனடியன் விமானப்படை விமானத்தில் பறக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சூட்கேஸுக்குள் யுவதியின் சடலம் கணவரும் சடலமாக மீட்கப்பட்டார்

## நியூபவுண்ட்லாண்டில் நடந்த சம்பவம்




**ஒன்ராரியோ, ஜுலை 21**

கனடாவின் நியூபவுண்ட்லான்ட்டில் சூட்கேஸ் ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

நியூபவுண்ட்லான்டின் சென் ஜோன்ஸ் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த பெண்ணின் சடலம் மீட்கப்படு வதற்கு முதல் நாள் அந்தப் பெண்ணின் கணவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அந்த் நபர் தமது மனைவியைக் கொலை செய்த பின்னர் தாம் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

33 வயதான ஈரானிய பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணின் கணவர் 34 வய தான ஈரானிய பிரஜை எனவும் அவரது சடலம் அவர்களது வீட்டில் மீட்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொலையா தற்கொலையா போன்ற எந்தவொரு விவரத்தையும் பொலிஸார் இதுவரையில் வெளியிடவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# ஒன்றாறியோவில் மதுபானக் கட்டுப்பாட்டு வாரியத்தின் வேலைநிறுத்தம் முடிவு; செவ்வாய் முதல் வழமை நிலை

**ஒன்ராரியோ, ஜூலை 21**

ஒன்றாறியோவின் மதுபானக் கட்டுப்பாட்டு வாரியமும் (எல்.சீ.பீ.ஓ.) அதன் 10,000 தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கமும் நேற்று சனிக்கிழமையன்று ஒரு தற்காலிக உடன்படிக்கையை எட்டின.

இது மாகாணம் முழுவதும் நூற்றுக்கணக்கான எல்.சீ.பீ.ஓ. சில்லறை விற்பனைக் கடைகளை இழுத்து மூடிய இரண்டு வார வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும்.

எல்.சீ.பீ.ஓ. மற்றும் ஒன்டாரியோ பொதுச் சேவை ஊழியர் சங்கம் (OPSEU) இரண்டும் நேற்று சனிக்கிழமை காலை வேலைக்குத் திரும்புவதற்கான நெறிமுறையில் கையெழுத்திட்டன.

அதற்கு முதல் நாள் தற்காலிக ஒப்பந்தம் திடிரெனக் குழம்பி இடைநிறுத்தப்பட்டது. ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டால், தொழிற்சங்க ஊழியர்கள் திங்கள்கிழமை வேலைக்குத் திரும்புவார்கள், கடைகள் செவ்வாய்க்கிழமை மீண்டும் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இக்குழப்பம் வார இறுதியில் ஏற்பட்டது.

ஒன்ராரியோவில் மது விற்பனை மையங்களான எல்.சீ.பீ.ஓ. வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான தற்காலிக ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டதா. அப்போது அறிவிக்கப்பட்டது.

புதிய கோரிக்கைகளை தொழிற்சங்கம் அறிமுகப்படுத்துவதாக மாகாண நிர்வாகம் குற்றம் சாட்டிய நிலையில் இந்தத் தற்காலிக ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படும் தகவல் வெளியானது.

பணிக்குத் திரும்புவதற்கான நெறிமுறையின் விதிமுறைகளில் இரு தரப்பும் உடன்பட முடியாது நிலை தோன்றியுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதனால் ஒரு தற்காலிக உடன்படிக்கை அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களில் எல்.சீ.பீ.ஓ. வேலை நிறுத்தம் மீண்டும் தொடர்கிறது என்றும் செய்திகள் வெளியாகின.

ஜூலை 19ஆம் திகதி தொழிலாளர்கள் உடனான ஒப்பந்தத்தை எல்.சீ.பீ.ஓ. அறிவித்தது.

இதன் மூலம் ஜூலை நாளை மறுதினம் 23ஆம் திகதி முதல் கடைகள் மீண்டும் திறக்கப்படும் என எல்.சீ.பீ.ஓ. அறிவித்திருந்தது.

ஆனாலும் வேலைக்கு திரும்புவதற்கான நெறிமுறையில் கையெழுத்திட ஒன்ராரியோ மாகாணம் மறுக்கிறது என தொழிற்சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் வெள்ளி பிற்பகல் நடைபெற்ற ஒரு செய்தியாளர் சந்திப்பின் போது கூறினார்.

வேலைக்குத் திரும்புவதற்கான நெறிமுறை ஆவணம் இல்லாமல் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான எந்த ஒப்பந்தமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்

ஆனாலும் ஒப்பந்தம் அறிவிக்கப்பட்ட பின்னர் தொழிற்சங்கம் புதிய கோரிக்கைகளை அறிமுகப்படுத்தியதாக மாகாண அரசாங்கம் குற்றம் சாட்டியது.

இந்தக் குழப்பப் பின்புலத்தில் மீண்டும் இணக்கம் ஏற்பட்டிருப்பதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

“எங்கள் 10,000 தொழிற்சங்க ஊழியர்களை திங்கட்கிழமை மீண்டும் பணிக்கு வரவேற்க நாங்கள் எதிர்நோக்குகிறோம்” என்று எல்.சீ.பீ.ஓ. இப்போது தெரிவித்துள்ளது.